Registered as a News Paper　பக்கங்கள் 04　விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　Peoples Daily　மக்கள் தினசரி

நாதம்: 02　திருவள்ளுவர் ஆண்டு 2022　கார்த்திகை 25　(11-12 1991)　புதன்கிழமை　ஓசை: 296

## எழுதுவினைஞர் விண்ணப்பம் சுற்றறிக்கைக்கு முரணானது

வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் உள்ள செயலகங்களில் ஏற்பட்டுள்ள எழுதுவினைஞர்களுக்கான வெற்றிடங்களுக்கு அண்மையில் கோரப்பட்டிருந்த விண்ணப்பங்கள் பொது நிர்வாகச் சுற்றறிக்கை தாபனக்கோவைக்கு முரணானது எனத் தெரிவிக்கப்படுகின்றது. அண்மையில் கோரப்பட்ட விண்ணப்பங்களில் கோரப்பட்டிருந்த தகைமையில் ஒரே அமர்வில் தமிழ், கணிதம் உட்பட ஐந்துபாடங்களில் திறமைச்சித்தியெய்தியும், ஆறாவது பாடம் அடுத்த அமர்வில் இருக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தாபனக் கோவையின் இது சம்பந்தமான பிரிவில் 06-06-89 ஆம் திகதியின் 36/89 ஆம் இலக்கம்

(4ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கத்துடனான பேச்சில் முடிவில்லை; யாழ். செல்வதில் பலன் ஏற்படாது!

## அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துடனும், எதிர்க் கட்சியுடனும் பேசிக் கொண்டிருக்கிறேன். தீர்வு பற்றிய முடிவு எதற்கும் இன்னும் வரமுடியவில்லை. அதில் கிடைக்கும் முடிவுகளோடு யாழ்ப்பாணம் செல்வதுதான் பொருத்தமாக இருக்கும். வெறும் கையுடன் யாழ்ப்பாணம் போய் பிரயோசனம் இல்லை இவ்வாறு பி. பி. ஸி க்கு வழங்கிய பேட்டியில் அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தொண்டமான் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியின் ஒரு பகுதி வருமாறு:

கேள்வி;

தமிழருடைய யாழ்ப்பாண விஜயத்தை ஒத்திவைத்துள்ளீர்கள். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பதற்கமைய தைப்பொங்கலுக்குப் பின்னர் யாழ்ப்பாணம் வருவதாக அறிவித்துள்ள நீங்கள் உங்கள் திட்டத்தின் சாத்தியக்கள் பற்றிக் கூறமுடியுமா?

பதில்;

என்னை டிசம்பர் 10 இல் யாழ்ப்பாணம் வரும்படி அழைத்து இருந்தார்கள். ஆனால் இரண்டு காரணங்களால் என்னால் செல்ல முடியவில்லை, ஒன்று இங்கு [கொழும்பில்] எதிர்க்கட்சி மற்றும் அரசாங்கக் கட்சிகளுடன் பேசிக்கொண்டிருக்கின்றேன். அது பற்றி இன்

(4ஆம் பக்கம் பார்க்க)

## புதிய தீர்வுத் திட்டம்; தொண்டமான் தயாரிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக ஒரு தீர்வுத்திட்டத்தை அமைச்சர்தொண்டமான் உருவாக்கியுள்ளதாகத் தெரிகிறது. இத் தீர்வுத்திட்டம் விடுதலைப் புலிகளுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ள அதே வேளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் பாராளுமன்றத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## செட்டிகுறிச்சாவில் வீட்டிற்குத் தீ

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள செட்டிகுறிச்சா என்னும் கிராமத்தை நேற்று முன்தினம் பிற்பகல் ஐந்து மணியளவில் சுற்றி வளைத்த இராணுவத்தினர் தேடுதல் வேட்டை நடத்தியுள்ளனர். இத் தேடுதலின்போது இராணுவத்தினர் ஒரு வீட்டை தீயிட்டுக் கொளுத்தினர் எனத் தெரிய வருகின்றது.

## இந்தியாவில் பயிற்சி முகாம்; எவ்வாறு உறவு வலுப்படும்?

- ஹேரத்

(கொழும்பு)

இந்தியா உட்பட அயல் நாடுகளுடனான உறவு இப்போது வலுப்படுத்தப்பட்டுள்ளது. தென் இந்தியாவில் புலிகளின் பயிற்சி முகாம் இருந்தது. புலிகளுக்கு ஆயு

(4ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை கிராமங்கள் சுற்றிவளைப்பு துப்பாக்கிச் சூடு; ஒருவர் பலி

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள நாலூர், வீரமாநகர் மணைமுந்தல், பாட்டாளிபுரம், சீதனவெளி, பாலமுனை, சேனையூர், இலலக்கந்தை, கூனித்தீவு ஆகிய கிராமங்களை கடந்த ஆறாம் திகதி சிறிலங்கா இராணுவத்தினரால், சுற்றிவளைக்கப்பட்டன. கற்றி வளைக்கப்பட்ட கொக்கட்டி, இளக்கந்தை, உப்புவெளி, கூனித்தீவு, ஆகிய இடங்களும் இராணுவத்தின் சுற்றிவளைப்பிற்கும், துப்பாக்கி பிரயோகத்திற்கும் உள்ளாகியது. இப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமுற்ற இராசரத்தினம் அரியகண்ணா என்பவரை இராணுவத்தினர் உயிருடனே தீ மூட்டி எரித்துள்ளனர்.

## புலிகளின் தாக்குதலுக்கு ஆறு இராணுவம் பலி

## நாளை வெளிவரும்

எமது பத்திரிகையில் வெளிவந்த 1982 தொடக்கம் மண் மீட்புக்காய் உயிர்நீத்த மாவீரர்களின் குறிப்பேட்டின் இறுதி இணைப்புப்பிரதி நாளை வெளி வரும்.

இது வரை வெளி வந்த பிரதிகளில் தவறுகள் இருப்பின் எமது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்;

...விஜயத்தை ஒத்திவைத்துள்ளீர்கள். ஏதோ பிறந்தால் வழி பிறக்கும் என்பதற்கமைய தைப்பொங்கலுக்குப் பின்னர் யாழ்ப்பாணம் வருவதாக அறிவித்துள்ள நீங்கள் உங்...

...ஆனால் இரண்டு காரணங்களால் என்னால் செல்ல முடியவில்லை, ஒன்று இங்கு [கொழும்பில்] எதிர்க்கட்சி மற்றும் அரசாங்கக் கட்சிகளுடன் பேசிக்கொண்டிருக்...

(யாழ்ப்பாணம்)
தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக ஒரு தீர்வுத்திட்டத்தை அமைச்சர் தொண்டமான் உருவாக்கியுள்ளதாகத் தெரிகிறது. இத்...

...தீர்வுத்திட்டம் விடுதலைப் புலிகளுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ள அதே வேளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் பாராளுமன்றத்...
(4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு எதிரான நடவடிக்கை; ராணுவத்தை அனுப்பகோரினேன்

## — கருணாநிதி

(சென்னை)

ரெலோ தலைவர் சிறிசபாரத்தினம் கொலை முதல் ராஜீவ் காந்தி கொலை வரை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட செயல்கள் ஒவ்வொன்றையும் நான் கண்டித்து வந்துள்ளேன் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

கடந்த வாரம் சென்னை அண்ணா நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசியபோது இவ்வாறு கருணாநிதி தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய கருணாநிதி;

ராஜீவ் கொலைக்குப் பின்னரே அ. தி. மு. க. கட்சியின் செயலாளர் செல்வி ஜெயலலிதா விடுதலைப் புலிகள் பற்றிய தனது கருத்துக்களை மாற்றிக் கொண்டார். நானும் எனது கருத்தை மாற்றிக் கொண்டேன்.

நான் ஆட்சிக் காலத்தில் இருந்தபோது தமிழக பொலிசார் மீது உங்களுக்கு நம்பிக்கையில்லாவிடில் மத்திய அரசாங்கத்தின் படைகளை அனுப்பி புலிகள் மீதான நடவடிக்கைகளை ஈடுபடுத்தும்படி பிரதமர் சந்திரசேகரரை நான் கேட்டிருந்தேன். இதுதொடர்பான ஆதாரங்களை நான் பத்திரிகையாளர்களிடம் காட்டினேன்.

1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் வயர்லஸ் கருவிகளை கைப்பற்றுமாறு மத்திய அரசாங்கம் தமிழக அரசிற்கு பணிப்புரை வழங்கிய போது அப்படிச் செய்தால் அரசியல் எதிர்ப்பை கிளப்பிவிடுமென அ. தி. மு. க. அரசாங்கம் அறிவித்தது.

ஒக்டோபர் 10 ஆம் திகதி யுத்தம் ஆரம்பமானபோது மத்திய அரசாங்கம் தமிழக அரசாங்கத்திற்கு எச்சரிக்கை செய்து நடவடிக்கை எடுக்குமாறு கூறியது. அதன் பின்னரே அ.தி.மு.க. அரசாங்கம் ஏழு வயர்லஸ் செற்றுகளைக் கைப்பற்றியது;

அத்துடன் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட ஏழு நாட்களுக்குள் மத்திய அரசாங்கத்தில் பதவியிலிருந்த இந்திரா காங்கிரஸ் கட்சியும், தமிழகத்தில் அதிகாரத்திலிருந்த அ.தி.மு.க. வும் விடுதலைப் புலிகள் மீதான கட்டுப்பாடுகளில் தளர்வுகளை ஏற்படுத்த முடிவு செய்தன.

ஆனால் விடுதலைப் புலிகளுக்கும், இந்தியப்படையினருக்கும் இடையிலான தகராறு முடியாதபடியினால் 1988 ஆம்
(4 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் அனுதாபம் பெற கருணாநிதி முயல்கிறார்

### இந்தியப் பத்திரிகைகள் தகவல்

(டில்லி)

மக்களின் பரிதாபத்தைப் பெறுவதற்காகவே பயங்கரவாத அழிவுத் தடைச் சட்டத்தின் கீழ் தான் கைதுசெய்யப்படவிருக்கிறார் என்ற அச்சுறுத்தலைத் தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி நன்றாகப் பயன்படுத்துகிறார் என இந்தியப் பத்திரிகைகள் கருத்துத் தெரிவித்துள்ளன.

தாங்கள் பதவியில் இருந்த போது அ. தி. மு. கவும், இந்திரா காங்கிரசும் விடுதலைப் புலிகளுக்குச் செய்துள்ள உதவிகளை ஒப்பிடும்போது பார்க்கையில் தாங்கள் செய்துள்ள உதவி அவ்வளவு பெரிதல்ல என்பதை காட்டுவதற்காக தி.மு.க தற்போது தமிழகம் முழுவதிலும் பொதுக் கூட்டங்களை நடாத்தி வருகின்றது என்றும் அப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

...மாலமுனை, சேனையூர், இலங்கைத்துறை, கூனித்தீவு ஆகிய கிராமங்கள் கடந்த ஆறாம் திகதி சிறிலங்கா இராணுவத்தினரால், சுற்றிவளைக்கப்பட்டன. சுற்றி வளைக்கப்பட்ட பகுதிகளில் இராணுவத்தினர் கண்மூடித்தனமான முறையில் துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டனர். இத் துப்பாக்கிப்பிரயோகத்தில் இராசரத்தினம் ஞானநாயகம் என்பவர் உயிரிழந்தார். மலைமுந்தல் பகுதியில் கணேஷ் அருணாசலம் என்பவர் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டினால் படுகாயமடைந்தார்.

கட்டைபறிச்சான் கணேசபுரம், உப்பூறல், கயமுந்தான் ஆகிய பகுதிகளை ஏழாம் திகதியன்று சுற்றிவளைத்த இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தினால் குணவன் என்பவர் படுகாயமடைந்தார். இவரை இராணுவத்தினர் முகாமிற்குக் கொண்டு சென்றுள்ளனர். இதேவேளை [illegible]. இப் பகுதியில் [illegible] துள்ளனர்.

## பரீட்சை நிலையம்மீது குண்டுவீச்சு; அரசின் அநாகரிகமான செயல்

### தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன் தமிழ் மாணவர்களின் கல்வி நலனில் உண்மையாக அக்கறையுள்ளவராயின் தனது தேர்தல் மாவட்டமான வன்னியில் பரீட்சை நிலையத்தின் மீது விமானக்குண்டுவீச்சு நடாத்தியமையைக் கண்டித்து அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் - இவ்வாறு தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

நேற்று அவர் யாழ்ப்பாணத்தில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், பண்டிவிரிச்சான் க. பொ. த பரீட்சை நிலையத்தின் மீது விமானக் குண்டு வீச்சு நடாத்தியமை வன்மையாகக் கண்டிக்கவேண்டிய செயலெனவும், மனித நேயமற்ற, அநாகரிகமான, கோழைத்தனமான செயலெனவும் குறிப்பிட்டுள்ளது.

யுத்தத்தைப் பிரகடனப்படுத்தி விமானக் குண்டு வீச்சு, ஷெல்தாக்குதல் மேற்கொண்டு
(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலுக்கு ஆறு இராணுவம் பலி

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், மேலும் மூன்று இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

## புலிகள் ஆதரவாளரை சரணடைய உத்தரவு

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான தீவிரவாத அமைப்பு ஒன்றின் உறுப்பினர்கள் எனக்கூறப்படும் நான்குபேரை சரணடையுமாறு கோரும் அறிவிப்பு ஒன்றை நீதிபதி எம். எம். சித்தீக் பிறப்பித்துள்ளார்.

பயங்கரவாதம் மற்றும் சீர்குலைவு தடுப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள விசேட நீதிமன்றத்தின் நீதிபதியான சித்தீக் விடுத்த அறிவிப்பில் அடுத்த மாதம் இரண்டாம் திகதிக்கு முன்பு இவர்களைச் சரணடையுமாறு கோரியுள்ளார்.

குணா என்னும் சங்கர மூர்த்தி, சுரேஷ் என்னும் நிதாவுன், குமார் என்னும் பெரியண்ணன், பெரியார் மாவட்டம் மரப்பாளையத்தைச் சேர்ந்த ஆறுமுகம் ஆகிய இந்நால்வரையும் நீதிபதி சரணடையக் கோரியுள்ளார். இவர்கள் தமிழகக் காவல் துறையினரால் தேடப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## குடாநாட்டின் வான்பரப்பில் விமான ஓட்டம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படை விமானங்களின் நடமாட்டம் நேற்று குடாநாட்டு வான்பரப்பில் அதிகமாகக் காணப்பட்டது.

இவ்விமானங்களின் அதீத நடமாட்டம் காரணமாக திருநெல்வேலிப்பகுதிப் பாடசாலைகளில் க. பொ. த. பரீட்சை எழுதிய மாணவர்கள் சிரம
(4 ஆம் பக்கம் பார்க்க)

# வதிவிட வேளாண்மைப் போட்டி 1991-1992

## தமிழீழ ஆய்வு நிறுவனம் - யாழ். மாவட்டம்

தமிழீழ விடுதலைப் போராட்டமானது பேரினவாத, ஒடுக்கு முறைகளில் இருந்து எம்மக்களை விடுவிப்பதோடு மட்டும் நிற்க வில்லை. சார்ந்து நிற்கும் பொருளாதார நிலையில் இருந்து தமிழ் மக்களை விடுபடச் செய்து எமது சொந்த மண்ணில் சொந்தக் கால்களில் தங்கி நிற்கும் தன்னிறைவான பொருளாதார வாழ்வைக் கட்டி எழுப்புவதற்கும் வழி வகுத்துள்ளது.

இப்பணியில் செயற்பட்டு வரும் தமிழீழ ஆய்வு நிறுவனம் தமிழ் மக்கள் அனைவருமே இன்று எதிர்கொண்டுள்ள பொருளாதார சுமையிலிருந்தும் விடுபட பல்வேறு செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயற்படுத்தி வருகின்றது.

அந்தவகையில் தமக்குத் தேவையான உணவை எந்த நெருக்கடியான காலகட்டத்திலும் தாமே உற்பத்தி செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் ஒவ்வொரு குடும்பத்தினரும் தமது வீட்டை அண்டிய பகுதியில் வேளாண்மைச்செய்கையில் ஈடுபடவேண்டும் என தமிழீழ ஆய்வு நிறுவனம் கேட்டுக்கொள்கின்றது.

இவ்வாறாக வதிவிட வேளாண்மையில் ஈடுபாட்டுள்ள மக்களை ஊக்கப்படுத்தும் விதமாகவும் 1991/1992 காலப்பகுதியில் யாழ் குடாநாட்டிலிருக்கும் குடியிருப்பாளர்களை உற்பத்தி முயற்சியில் ஈடுபடவைக்கவும் வதிவிட வேளாண்மைப்போட்டி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஊக்கமாகவும், முன்னேற்றமாகவும் இச்செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

எனவே அனைத்து குடியிருப்பாளர்களும் தமது வீடு அமைந்துள்ள காணியில் அல்லது வதிவிடத்திற்கு அண்மையாக உள்ள 04 பரப்புக்கு உட்பட்ட காணியில் வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டு தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு, பரிசுகளையும் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

### போட்டிக்கான நிபந்தனைகளும் புள்ளிகளும்

1. வீடு அமைந்திருக்கும் மாதிரிக்கேற்ப வதிவிடப்பயிர்ச் செய்கையை அமைத்து கவர்ச்சிகரமாக வைத்திருத்தல். (5. புள்ளிகள்)
2. 10 அடி நீளமும் 3 அடி அகலமும் அள பாத்திகளில்

10. தாரா குறைந்தது ஒரு சோடி வளர்த்தல் (5 புள்ளிகள்)
11. பசுமாடு குறைந்தது ஒன்று வளர்த்தல் (10 புள்ளிகள்)
12. ஆடு குறைந்தது ஒன்று வளர்த்தல் (10 புள்ளிகள்)
13. முயல் குறைந்தது ஒருசோடி வளர்த்தல் (5 புள்ளிகள்)
14. விலங்குத் தினியாக புல்லினம், இப்பில் இப்பில் முள் முருங்கை, சீமைக்கிளுவை என்பன இருத்தல் (5 புள்ளிகள்)
15. பராமரிப்பு முறைக்கு (5 புள்ளிகள்)

### பரிசில்கள் விபரம்:

பணப்பயிரான புகையிலைச் செய்கையை மட்டுப்படுத்தும் விதத்திலும் உணவுப் பயிர்களை பயிரிடத் தூண்டும் வகையிலும் புகையிலைச் செய்கையில் ஈடுபட்டவர்களிடமிருந்து பெற்ற பணப்பயிர் உற்பத்தி வரியினால் கிடைக்கப்பெற்ற பணத்தின் மூலம் பரிசில்கள் வழங்கப்படும்,

| | | |
|---|---|---|
| 1. கமநலசேவை மட்டம் | 1ஆம் பரிசு ரூபா | 2000/- |
| | 2ஆம் பரிசு ,, | 1000/- |
| | 3ஆம் பரிசு ,, | 500/- |
| 2. பிரிவு மட்டம் | 1ஆம் பரிசு ,, | 5000/- |
| | 2ஆம் பரிசு ,, | 3000/- |
| | 3ஆம் பரிசு ,, | 2000/- |
| 3. பிராந்திய மட்டம் | 1ஆம் பரிசு ,, | 10000/- |
| | 2ஆம் பரிசு ,, | 7000/- |
| | 3ஆம் பரிசு ,, | 5000/- |

மேலும் 100க்கும் மேற்பட்ட ரூபா 500/- பெறுமதியான பல ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

வதிவிட வேளாண்மை


### வரி விளம்பரம்

**பயிற்சி வகுப்புகள்**

ஆரம்ப ஆசிரியர், பயிலுனர் ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர் சேவை ஆகிய போட்டிப் பரீட்சைகளுக்கு 2 மாத கால பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் 12-12-91 2.30 மணி பாடக்குறிப்புகள் இலவசம் முழுக்கட்டணம் 150/- மட்டுமே. School of Business Administration 16, 3rd Cross Street, Jaffna. (B/3595)


### உதைபந்தாட்டப் போட்டி

கடற்புலிகளின் அனுசரணையுடன் ஒழுங்கிணைக்கப்பட்ட விளையாட்டுக்குழுவால் நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டி நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை (11. 12. 91) பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 3.00 மணியளவில் இந்த உதைபந்தாட்டப் போட்டி ஆரம்பமாகும்.

### 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 09 - 08 - 1969



மறைவு: 11 - 12 - 1988

**வீரசிங்கம் சிவதாசன்**

கொள்ளை ஆசையுடன் குழந்தையே
உன்னைப் பெற்றேன் தென்னு தமிழுடனே
தேன் கலந்து பாலூட்டி
அள்ளி அணைத்த உடல்
அனலிடையே வேகுதையோ!

நவாலி வடக்கு, மானிப்பாய் (R/1992) அப்பா, அம்மா, சகோதரர்கள்

### நினைவு கூருகின்றோம்...

**1991 - 12 - 11**

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்காப்

1. வீடு அமைந்திருக்கும் மாதிரிக்கேற்ப வதிவிடப்பயிர்ச் செய்கையை அமைத்து கவர்ச்சிகரமாக வைத்திருத் தல். (5 புள்ளிகள்)

2. 10 அடி நீளமும் 3 அடி அகலமும் ஆன பாத்திகளில் மரக்கறிப்பயிர்களான வெண்டி, மிளகாய், பயிற்றங் காய், கத்தரி, தக்காளி, புடோல், பாகற்காய், பீர்க் கங்காய், கோவா, பீற்றூட், கரட், போஞ்சி இவற் றுள் குறைந்தது ஐந்து (5) வகைப்பயிர் இனங்கள் இருத்தல் வேண்டும். (5 X 2 - 10 புள்ளிகள்)

3. 10 அடி நீளமும் 3 அடி அகலமுமான பாத்திகளில் இலைக்கறிப்பயிர்களான பொன்னாங்காணி, கீரை, பசளி, கங்குக்கீரை ஆகியவற்றில் குறைந்தது இரண்டு வகை இருத்தல் அவசியம். அதோடு குறைந்தது அகத்தி, முருங்கை, தவசி முருங்கை ஆகியவற்றில் ஒரு மரமாவது இருத்தல் வேண்டும். (5 புள்ளிகள்)

4. பழமரங்களான பப்பாசி, வாழை, மா, கொய்யா, தோடை, கொடித்தோடை, பலா என்பனவற்றுள் குறைந்தது நான்கு இனங்கள் இருத்தல் அவசியம். (10 புள்ளிகள்)

5. தூதுவளை, முசுட்டை, குறிஞ்சா, கற்பூரவள்ளி, கறி வேப்பிலை, றம்பை, இஞ்சி போன்றவற்றில் குறைந் தது ஐந்து இருத்தல் வேண்டும். (5 புள்ளிகள்)

6. பயனுள்ள மரங்களில் தென்னை இரண்டு, கமுகு இரண்டு, இப்பில் இப்பில் பத்து ஆகியவற்றுள் குறைந்தது இரண்டு இனங்கள் இருத்தல் வேண் டும். (5 புள்ளிகள்)

7. கூட்டெருத் தயாரித்தல். (5 புள்ளிகள்)

8. தேனீ வளர்த்தல் (5 புள்ளிகள்)

9. கோழி வளர்ப்பில் குறைந்தது 10 கோழிகள் இருத் தல் (10 புள்ளிகள்)

3ஆம் பரிசு ,, 5000/-

மேலும் 100க்கும் மேற்பட்ட ரூபா 500/- பெறுமதியான பல ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

## வதிவிட வேளாண்மை பார்வையிடும் காலம்:

192 தை மாதம் இரண்டாம் வாரம் தொடக்கம் பங்குனி இரண்டாம் வாரம் வரையுமான காலமாகும்.

## யாழ். குடாநாட்டில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் நடாத்தப்படும் வதிவிட வேளாண்மைப் போட்டிக்கான விண்ணப்பம்

01. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :
02. விலாசம் :
03. காணி அமைந்துள்ள இடம் :
04. கிராமிய உற்பத்திக் குழுப்பிரிவு :
05. கமநலசேவை நிலையப் பெயர் :

மேற்குறிப்பிட்டுள்ள செய்தியில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் தரப்பட்டுள்ள போட்டி விதிகளுக்கு அமைய நான் போட்டியில் கலந்து கொள்ள விண்ணப்பிக்கின்றேன். போட்டியின் முடிவுகளை நடுவர் தீர்ப்புக்களை ஏற்றுக் கொள்வேன் எனவும் உறுதியளிக்கின்றேன்.

..............................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி: ..........................

குறிப்பு: விண்ணப்பங்கள் யாவும் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் யாழ் மாவட்டச் செயலகம், பிரிவுச் செயலகங்கள், இணைப்பாளர் செயலகங்கள் ஆகியவற்றுக்கு நேரடியாகவோ கடிதம் மூலமோ 30.12.1991க்கு முன்னதாக கிடைக்கக் கூடியமுறையில் அனுப்பி வைக்கவும்.

(B-3474)

# 1991 - 12 - 11

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய் வீதியைச்சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்

1987 ஆம் ஆண்டு சுன்னாகம், மயிலணிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**சங்கர் | விக்கி** (தம்பிராசா விக்கினேஸ்வரராஜ் அம்மன் வீதி, உடுவில் வடக்கு, சுன்னாகம்)

1988 ஆம் ஆண்டு சாடியனாறு சிவத்தகப்பாலத்தில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**சுதன்** (நிசம்பு நடேசமூர்த்தி - அம்பாறை)

**2 ஆம் லெப். கெனடி** (சோமபிள்ளை சுரேந்திரன், கறுவாக்கேணி, வாழைச்சேனை, மட்டக்களப்பு)

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, சத்துருக்கொண்டான் பகுதியில் தேசவிரோதிகளுடனான மோதலில் வீரச்சாவெய்திய

**கப்டன் றீகன்** (சின்னக்குட்டி கந்தசாமி கோரக்கல்லிமடு, கிரான், மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, தன்னாமுனைப் பகுதியில் தேசவிரோதிகளுடனான மோதலில் வீரச்சாவெய்திய

**தோத்திரம் / சமுத்திரன்** (தம்பியப்பா தவநாயகம் சந்திவெளி முறக்கொட்டாஞ்சேனை, மட்டக்களப்பு)

1990 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறையில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த

**லெப். கரிகரன்** (கார்த்திகேசு குலேந்திரன் கெருடாவில் வடக்கு, சாவகச்சேரி)

அம்பாறை மற்றும் காரைதீவுப் பகுதியையும் சுற்றிவளைத்த சிறிலங்கா அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(B/3614)

## ❋ சிந்தனைக்கு ❋

ஹிட்லர் முஸோலினியிடம் வியக்கத்தக்க அளவிற்கு விசுவாசம் காட்டினார் - ஆனால், அவரிடம் நம்பிக்கை வைக்கும் அளவிற்கு அதை நீட்டவில்லை அவர்.

- ஆலன் புல்லாக்

ஈழநாதம்

மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 11-12-1991

தொலைபேசி

ஆசிரியர்பீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2808

த. பெ. என் 05

# தமிழகத்தில் காட்டிக் கொடுக்கும் போட்டி

விடுதலைப் புலிகளுக்கு யார் கூடுதல் உதவி செய்தார்கள், கண்டனம் செய்தார்கள் என்ற சர்ச்சை தமிழ் நாட்டில் இப்பொழுது முக்கிய பிரச்சினையாக எழுந்துள்ளது. இதனால் காட்டிக்கொடுக்கும் போட்டி தீவிரமாகியுள்ளது

திரு கருணாநிதி தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் ஆயுதக் கலாசாரம் அதிகரிக்கவும் ராஜீவ் காந்தியின் கொலைக்கும், ஆயுதக் கடத்தல்களுக்கும் உதவியாக இருந்தார் என அ. தி. மு. க., காங்கிரஸ் கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.

தி மு கவோ, விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டில் தி. மு. க. ஆட்சியின்போது வந்து சேரவில்லை மாநிலத்தில் அ. தி. மு. கவும் மத்தியில் காங்கிரசின் ஆட்சியின்போதுமே வந்துசேர்ந்தார்கள். அவர்களுக்கு ஆயுதமும், பயிற்சியும் அளித்தது மத்தியில் இருந்து காங்கிரஸ் அரசாங்கம் அவர்களுக்கு அரவணைப்பும் ஆயுதக் கடத்தலுக்குப் பணமும் கொடுத்தது மாநிலத்தில் இருந்த அ. தி மு கவின் அரசாங்கம் என்பதோடு மறைந்த முதலமைச்சர் எம் ஜி ராமச்சந்திரன் மட்டுமல்ல தற்போதைய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவும் முன்னர் புலிகளுக்கு ஆதரவு வழங்கியவர்களே எனக் குற்றம் சாட்டுகின்றது.

ஆனால் இலங்கைத் தமிழரைப் பொறுத்தோ அன்றி விடுதலைப் புலிகளைப் பொறுத்தோ இதுவல்ல விவகாரம். எக்கட்சியினர் எவ்வளவு உதவி செய்தனர் என்பதைவிட ஏன் உதவி செய்தனர் என்பதே முக்கியமான விடயமாகும். தற்பொழுது யார் கூடுதல் உதவி செய்தனர் என ஒருவர் மீது மற்றவர் குற்றம் சாட்டிக் காட்டிக் கொடுக்க ஏன் முனைகின்றனர் என்பதே விவகாரம். இதனைப் புரியும்போது இலங்கைத் தமிழர் விவகாரத்தை இவர்கள் எவ்வாறு தமது நலனுக்குப் பயன்படுத்தினர் என்ற உண்மை புரியவரும்.

விடுதலைப் புலிகளுக்கு வெளிப்படையாக உதவி அளித்தவர்களில் முன்னாள் முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரன் முக்கியமானவராகக் கொள்ளப்படுகின்றார். அவர் விடுதலைப் புலிகள் எப்பொழுதும் தனது கட்டுப்பாட்டினுள் [illegible]

# சோவியத் யூனியனின் விதியினை மக்கள்தான் நிர்ணயிக்க முடியும்

### --கொர்பசேவ்

(மொஸ்கோ)

சோவியத் யூனியனின் விதியை மக்களால் தான் நிர்ணயித்திட முடியுமே தவிர தனிப்பட்ட குடியரசுகளின் தலைவர்களால் செய்து விட முடியாது என சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் தெரிவித்துள்ளார்.

முன்னதாக ரஷ்யா, பைலோரஷ்யா மற்றும் உக்ரெயின் குடியரசுகள் தாம் சுதந்திர நாடுகளின் பொதுநல அமைப்பை உருவாக்கியுள்ளதாக அறிவித்திருந்தன.

இதனை ஆட்சேபித்து அறிக்கை வெளியிட்ட கொர்பசேவ் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனது அறிக்கையில் இந்த மூன்று குடியரசுகளும் விடுத்துள்ள பிரகடனம் குறித்து நாடு தழுவிய கருத்துக் கணிப்பு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்

இந்தப் பிரச்சினையைப் பரிசீலிப்பதற்காக மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றக் கூட்டம் உடனடியாக அமைக்கப்படவேண்டும் என்றும், கொர்பசேவ் தெரிவித்துள்ளார்.

மூன்று குடியரசுகளின் பிரகடனத்தை மற்றைய குடியரசுகளின் பாராளுமன்றங்களும் பரிசீலிக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## யூகோஸ்லாவியா போன்று சோ. யூனியனும் மாறலாம்; ஜேம்ஸ் பேகர் எச்சரிக்கை

(வாஷிங்டன்)

சோவியத் யூனியனில் யூகோஸ்லாவியாவைப் போன்று பிளவுபடும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று அமெரிக்க வெளிநாட்டமைச்சர் ஜேம்ஸ் பேகர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க தொலைக்காட்சி ஒன்றுக்கு ஜேம்ஸ் பேகர் அளித்துள்ள பேட்டியொன்றிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

சோவியத் யூனியனில் உள்ள அணுவாயுதங்களின் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம் என்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்கும் இக்கட்டான நிலைமையாக இது இருக்கக்கூடும் என ஜேம்ஸ் பேகர் தெரிவித்துள்ளார்.

சோவியத் யூனியனில் இடம்பெற்று வரும் மாற்றங்கள் முன்னேற்றத்துக்கான வாய்ப்புகளை அளிக்கின்ற போதிலும் பெரும் ஆபத்து அங்கே இருக்கின்றது என்றும்,

ஏற்படும் மாற்றங்கள் அமைதியான நிலையிலும், சாதகமான வகையிலும் ஏற்படுவதற்கு அமெரிக்கா ஓரளவிற்கு அதன் செல்வாக்கை பயன்படுத்த விரும்புகின்றது என்றும் ஜேம்ஸ் பேகர் குறிப்பிட்டுள்ளார்.

## சதிப்புரட்சி ஏற்படும் என கொர்பசேவ் எச்சரிக்கை

(மொஸ்கோ)

சோவியத் யூனியனில் சீர்திருத்தங்களை நிறைவேற்றாவிடில் சதிப்புரட்சி ஏற்படக்கூடும் என்று சோவியத் ஜனாதிபதி மிகயீல் கொர்பசேவ் எச்சரித்துள்ளார்.

புதிய சதிப்புரட்சியை சிலர் எதிர்பார்க்கின்றார்கள். சில வேளை அவர்கள் அதனை முயற்சியை ஆரம்பிக்கலாம், இராணுவத்துறையிலிருந்து அல்லது கம்யூனிஸ்ட் வட்டாரங்களிலிருந்து எவரும் புரட்சி நடத்த முன்வரலாம் என்றும் கொர்பசேவ் தெரிவித்தார்.

ஆனால் முன்னரே எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டும் என்றும் சீரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லாவிடில் சதியாளர்களை வெளியேற்ற [illegible]

## 'சார்க்' மாநாட்டின் பின் அமைச்சரவையில் மாற்றம்?

(கொழும்பு)

டிசம்பர் 21 ஆம் திகதி சார்க் உச்சி மாநாட்டின் பின் அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யப்படலாம் என்று நம்பகரமான அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சரவையில் மாற்றத்துடன் சில அமைச்சர்களுக்கும் பதவி உயர்வும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. விஞ்ஞான மற்றும் [illegible]

விட்டு வெளியேறுபவர்களை தமது கட்சியிற் சேர்த்துக் கொள்ளவே ஐக்கியதேசிய ஜனநாயக முன்னணி அமைப்பாளர்களை நியமிப்பதில் காலம் தாழ்த்தி வருகிறது.

அடுத்த ஆண்டில் மாகாண சபை உறுப்பினர் பலருக்கு ஐ. தே. க தனது பட்டியலில் போட்டியிட அனுமதியாது என்றும், 1992 ஆம் பல உறுப்பினர்கள் ஐ. தே. கவிட்டு வெளியேறிப் புதிய கட்சியில் [illegible]

## மூன்று நாள் நிவாரணத்திற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்குப் பகுதிகளில் இருந்து வெளியேறிய மக்களுக்கு மூன்று நாட்களுக்கான இலவச நிவாரணம் வழங்க யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை அதிகாலை முதல் பலாலி பகுதியில் சிறிலங்கா இராணுவத் தாக்குதல்களும் விமானப் படையின் குண்டுவீச்சுத் தாக்குதல்களும் இடம்பெற்றது தெரிந்ததே. இதனைத் தொடர்ந்து அச்சுவேலி, இடைக்காடு, ஒட்டகப்புலம், வளலாய் பகுதிகளிலிருந்து அச்சம் காரணமாக வெளியேறிய மக்கள் பலபகுதிகளிலும் தங்கியுள்ளனர். இவர்களுக்கே தற்போது மூன்று நாட்களுக்கான உலர் உணவு வழங்கப்படவுள்ளது. (ச)

## கப்பற் சேவைக்கு ஏற்பாடு

(கொழும்பு)

கற்பிட்டிக்கும், மன்னாருக்கும் இடையே கிரமமான சிறிய கப்பல் சேவையொன்றை நடாத்துவதற்கு புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்து வந்து புத்தளம் பகுதியிலுள்ள அகதி முகாம்களில் தங்கியிருக்கும் மன்னார் மக்கள் விரும்பின் பேசாலை மன்னாரிலுள்ள சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு வசதியாகவே இந்தக் கப்பல் சேவையை நடாத்த முன்வந்திருப்பதாக அமைச்சர் பி. தயாரத்தின பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இப்பத்திரிகையாளர் மாநாட்டில் வன்னி மாவட்ட எம். பிக்களான எம். அபூ, எம். எஸ். அபூபக்கர், கூட்டுப் படைத் தளபதி ஹமில்டன் வனசிங்க, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப், அகதிகள் புனர்வாழ்வு சேவையின் ஆணையாளர் சரித்த ரத்வத்தை ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கடவுச் சீட்டு மதிப்பு

# அநுரா ஏற்பாடு செய்த கூட்டம்; சிறிமாவால் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

அநுரா பண்டாரநாயக்கா வினால் ஏற்பாடு செய்யப் பட்ட மனித உரிமைகள் சம் பந்தமான கூட்டத்தை திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா பகிஷ்கரித்துள்ளார்.

உலக மனித உரிமைகள் நாளான நேற்று இரத்மலா னையில் நடைபெறுவதாக இருந்த இக்கூட்டத்திற்கு எதிர்க்கட்சிகள் பல அழைக்கப் பட்டிருந்தன ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மட்டும் அழைக்கப்படவில்லை. இதனை அடுத்த சிறிமாக்குழு சுதந்திரக்கட்சி இக்கூட் டத்தை பகிஷ்கரித்தது.

தங்களது கட்சியின் மனித உரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு நிலையில் தாம் எவ்வாறு கூட்டத்தில் பங்கு பற்றுவது என்ற நிலையிலேயே இதனை பகிஷ்கரித்ததாகவும் சிறிமா சார்பானவர்கள் தெரிவித்த னர்.

அத்துடன் சிறிமாவின் பக்க முள்ள ஐ. தே. க. அதிருப்தி யாளர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

## 1969-1977 வரை சிறிமாவின் சொத்தாக லேக்ஹவுஸ்

\- அஸ்வர்

(கொழும்பு)

1969 ஆம் ஆண்டு முதல் 1977 ஆம் ஆண்டுவரை 'லேக் ஹவுஸ்' பத்திரிகை நிறுவனம் சிறிமாவோ பண்டாரநாயக் காவின் குடும்பச் சொத்தாக பயன்படுத்தியது என்று சிறிலங் காவின் முஸ்லிம் சமய கலா சார ராஜாங்க அமைச்சர் ஏ. எச். எம். அஸ்வர் தெரி வித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற் றிய அஸ்வர் சிறிலங்கா சுதந் திரக் கட்சியின் பிரசாரப் பத் திரிகையாக 'லேக்ஹவுஸ்' பத் திரிகைகள் அப்போது விளங் கின.

இக் கடந்த காலத்தை மறந்து விட்டு இன்று ஐ. தே. க. அரசாங்கம் லேக் ஹவுஸை பயன்படுத்துகிறது என்று சிறிமா கூறுவது வியப்பாக உள்ளது என்றும் தெரிவித்தார்

## மணிப்பூரில் தாக்குதல் 9 இந்தியப் படையினர் பலி

(இம்பால்)

மணிப்பூரில் நேற்றுக் காலை என். எஸ். சி. என். தீவிர வாதிகள் நடத்திய தாக்கு தலில் ஒன்பது பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட் டதாக மணிப்பூர் காவற் துறை அறிவித்துள்ளது.

இம்பாலவிற்கு பணம் எடுத்துச் சென்ற வாகனத் தொடர் ஒன்றை இத் தீவிர வாதிகள் மறைந்திருந்து தாக்கி அவர்கள் கொண்டு சென்ற 73 லட்சம் ரூபா பணத் தினையும், ஆயுதங்களையும் கைப்பற்றினர் என்றும், இத் தாக்குதலில் மணிப்பூர் காவல் துறை சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட ஒன்பது பாது காப்புப் படையினரும், ஒரு பொது மகனும் கொல்லப்பட் டனர் என்றும், நான்கு வாக னங்கள் முற்றாகச் சேத மடைந்துள்ளன என்றும், தீவிரவாதிகள் தப்பிச் சென் றுள்ளனர் என்றும் மணிப்பூர் காவல் துறை தரப்பில் தெரி விக்கப்பட்டது.

---

எழுதுவினைஞர்

பொது நிர்வாகச் சுற்றறிக்கை யின்மூலம் கீழ்வரும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ், கணிதம் உட்பட இருபாடங்களில் இரு அமர்வு களுக்கு மேற்படாத வகையில் க.பொ.த. சாதாரண பரீட் சையில் சித்தி எய்தியிருக்க வேண்டும் எனத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் இச் சுற்றறிக்கையை புறக் கணித்து வெளியிடப்பட்ட விண்ணப்பத்திற்கான தகைமை யினால் அநேக மாணவர்கள் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

---

புலிகளுக்கு

ஆண்டு பெப்ரவரி 8 ஆம் திகதி மத்திய அரசாங்கம் தமிழக அரசாங்கத்திற்கு எழுதியுள்ள கடிதத்தில் விடுதலைப்புலிக ளின் துப்பாக்கி நடவடிக்கை

---

குடாநாட்டின்

பதற்றமடைந்தனர். எனினும் பரீட்சைகள் எதுவும் தடைப் படவில்லை.

குண்டு வீச்சு விமானங்கள்,

---

இந்தியாவில்

தங்கள் வழங்கப்பட்டன. நிதி யுதவி வழங்கப்பட்டது. இந்த நிலையில் இந்தியாவுடன் எப் படி உறவுகளை வலுப்படுத்த முடியும். ஆனால் இப்போது இந்த நிலை மாறியுள்ளது.

இவ்வாறு சிறிலங்கா வெளி யுறவுத்துறை அமைச்சர் ஹெரோல்ட் ஹேரத் பாரா ளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதம் நடந்த போது உரையாற்றுகையில் தெரிவித்தார்.

எஸ். சந்திரசேகர் பி. வி. நரசிம்மராவ் ஆகியோர் ஆட் சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர் இந்திய வுடனான நட்பு அபிவிருத்தி அடைந்துள்ளது.

ராஜீவ் காந்தி கொல்லப் பட்ட பின்னர் நிலை மாறி யுள்ளது. ராஜீவ் கொலை விசாரணையில் நாம் இந்தி யாவிற்கு உதவியுள்ளோம் என்றும் ஹரோல்ட் ஹேரத் தமது உரையில் குறிப்பிட்

---

புதிய

தெரிவுக்குழுவுக்கும் சமர்ப்பிக் கப்படவுள்ளது.

---

### பிறப்பு அத்தாட்சி பத்திரங்கள்

யாழ். செயலகத்திற்கு இர ண்டாயிரம் பிறப்பு அத்தாட் சிப்பத்திரங்கள் வந்துசேர்ந்தன இப்பத்திரங்கள் இதுவரை விண்ணப்பித்துள்ள விண்ணப்ப தாரிகளுக்கே வழங்கப் போவ தென செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

---

அரசாங்கத்துடனான

னும் முடிவுக்கு வர முடிய வில்லை அதில் கிடைக்கும் முடிவுகளோடு யாழ்ப்பாணம் செல்வதுதான் பொருத்தமா னதாக இருக்கும்.

வெறுங்கையோடு யாழ்ப் பாணம் போய் பிரயோசனம் இல்லை. இங்கு இருக்கிறவர் களின் அபிப்பிராயங்களைத் தெரிந்து கொண்டு போனால் தான் அங்கு பேச்சு நடத்த சுலபமாக இருக்கும். இன்று வரும்படி புலிகள் விடுத்த அழைப்பை ஏற்றுக் கொண் டாலும் இன்று வர முடிய வில்லை என்பதையும் பொங் கலுக்குப் பின் வருகிறேன் என்பதையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளேன்.

பதில்;

தமிழ் மக்களுக்கு ஓரளவுக் குச் சுயாட்சி இருக்க வேண் டும், தங்களுடைய விவகாரங் களை தாங்களே கவனித்துக் கொள்ள ஏதுவாக இது இருக் க வேண்டும் என்பதை தமி ழன் என்னும் முறையிலே என் மனதிலே வடிவமைத்துக் கொண்டு ஒரு திட்டத்தை நான் அமைத்துள்ளேன். ஏற் கனவே இதனை நான் விடுத லைப் புலிகளுக்கு அனுப்பி யுள்ளேன். இதனைப்பார்த்த பின்பு அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்கள். அதில் முன்னேற்றமிருக்கிறது. வர வேற்கக் கூடியதாகவுள்ளது என்று குறிப்பிருக்கும் புலிகள் ஆனால் இது முழுமையான தாக இல்லை என்றும் கூறி யுள்ளார்கள். அந்தத் திட் டத்தை வைத்து இரு அரசாங் கத்தையும், எதிர்க்கட்சியினை யும் அதை ஏற்க வைக்க முய ற்சி பண்ணுகிறேன். அந்தச் சூழலில் அதே நேரத்தில் ஒத்துப் போவார்கள் என்று தான் நினைக்கிறேன் என வேறொரு கேள்விக்குப் பதி லளிக்கையில் தெரிவித்தார்.

கேள்வி;

---

**150 ஆவது நாள் நினைவு அஞ்சலி**



தாயின் மடியில்

30-11-1974

★ ★ ★

தாயக மண்ணில்

13.7-1991

**2 ஆம் லெப். பூபாலினி**

[நாகரத்தினம் பரமேஸ்வரி]

பூபாலினி எங்குசென்றாய்?
புரியாத தாயிருந்தாய்
பூ என நீ மலர்ந்து
புயலென நீ விரைந்து
புகுந்த அப்பாசறை - உன்னை
புலியாக மாற்றியது.
ஈழமெங்கும் அடிமைத்தனம்
அரசபடையின் கொடுமைத்தனம்
தாங்க மறுத்தது உனது மனம்
மாற்றான் படை என்ன வல்லினமோ?
உன் கனவு நனவாகும்.
நாள் எல்லாம் மலர்ந்துவிடும்
தளைகளும் சமுதாயம்
நலமுடனே நிமிர்ந்து நிற்கும்

போற்றிடுவோம் எம்மாவீரரை போற்றிடுவோம் மௌன எழுத்துக்களால் வரலாற்றின் உயிர்மூச்சும் மாவீரர் தானே அம்மா.

யோகபுரம், மல்லாவி (8/3616) உறவினர், நண்பர்கள்,

---

**4-ம் ஆண்டு நினைவஞ்சலி**

வீரஜனனம்
10-08-1968



வீரமரணம்
11-12-1987

**விக்கி சங்கர்**

[விக்கினேஸ்வரராஜ்]

சதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

புலிகளுக்கு

ஆண்டு பெப்ரவரி 8 ஆம் திகதி மத்திய அரசாங்கம் தமிழக அரசாங்கத்திற்கு எழுதியுள்ள கடிதத்தில் விடுதலைப்புலிக ளின் துப்பாக்கி நடவடிக்கை களை அனுமதிப்பதாக குற் றஞ் சாட்டியிருந்தது. ஆனால் தமிழக அரசு அந்தக் குற்றச் சாட்டை மறுத்தது.

இந்திய - புலிகள் சண்டை யின் போதும் கூட மத்திய அர சாங்கமும் அ. தி. மு. க. அர சாங்கமும் விடுதலைப் புலிகளு டன் தொடர்பும் அநுதாபமும் கொண்டிருந்தன.

ஆனால் இதேபோன்று அதற்குக் குறைவாக செய்த என்னை இப்போது அதே அரசாங்கங்கள் எவ்வாறு என்னை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கூண் டில் நிறுத்த முடியும் என்றும் கருணாநிதி தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

விக்கப்பட்டது.

குடாநாட்டின்

பதற்றமடைந்தனர். எனினும் பரீட்சைகள் எதுவும் தடைப் படவில்லை.

குண்டு வீச்சு விமானங்கள், மற்றும் வை-12, வை-8 ஆகிய விமானங்கள் குடாநாட்டு வான் பிரதேசத்தில் அங் கும் இங்கும் பறந்து திரிந்தன. குண்டுத்தாக்குதல் எதுவும் நடாத்தியதாகத் தகவல் இல்லை: (ஈ)

பரீட்சை

மாணவர்களின் மனோநிலை யைப் பாதிப்படையச் செய்து சமகாலத்தில் பரீட்சையை நடாத்துவது மனிதனின் அடிப் படை உரிமைகளில் ஒன்றாகிய கல்வியை மறுக்கும் நடவடிக் கையெனவும், கல்வியைச் சீர ழிக்கும் செயலெனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

விசாரணையில் நாம் இந்தி யாவிற்கு உதவியுள்ளோம் என்றும் ஹரோல்ட் ஹேரத் தமது உரையில் குறிப்பிட்

புதிய

தெரிவுக்குழுவுக்கும் சமர்ப்பிக் கப்படவுள்ளது.

இதுதொடர்பாக பி. பி. ஸி செய்தியாளரிடம் பேசிய திரு. தொண்டமான் தான் தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயார் செய்துகொண்டு வருவதாக வும்கூறினார். அத்துடன் த யாழ்ப்பாண விஜயத்திற்குமுன் பாக தமது சமாதானத் திட்டத்தீர்மானங்களை அனைத்துக் கட்சித் தேர்வுக் குழு முன் சமர்ப்பித்து ஆலோசனைகளையும் பெற விருப்பமாகத் தெரிவித்தார்.

இத்தீர்வுத்திட்டம் முன்னர் விடுதலைப் புலிகளுக்கு திரு. தொண்டமான் அனுப்பிய தீர் வுத் திட்டத்தில் இருந்து சற்று மாறுபட்டதாக இருக்கும் எனத் தெரிய வருகின்றது.

திர் பண்ணுகிறேன். அந்தச் சூழலில் அதே நேரத்தில், ஒத்துப் போவார்கள் என்று தான் நினைக்கிறேன் என வேறொரு கேள்விக்குப் பதி லளிக்கையில் தெரிவித்தார்.

கேள்வி;

ஈழம் அல்லது தனிநாடு என் பதையே இலட்சியமாகக் கொண்டு போராடிவரும் விடு தலைப்புலிகள் உங்களுடைய தன்னாட்சிப் பகிர்வுத் திட் டத்திற்கு ஒத்து வருவார்கள் என்று எதிர்பார்க்கிறீர்களா?

பதில்;

ஏன் அதை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று நீங்கள் சந்தே கப்படுகிறீர்கள்? அவர்களு டைய நோக்கம் தமிழ் மக்க ளுடைய சுயாட்சி இருக்க வேண்டும் என்பதுவாக இருந் தால் அதை இன்னொரு தமி ழன் - என்னைப் போல ஒரு தமிழன் தமிழனுடைய மனப் பான்மையிலிருந்து தயாரிக்கிற பொழுது ஏன் இதை ஏற்கக் கூடாது என்று சந் தேகப்படுகிறீர்கள்? அரசிய லில் நான் ஐம்பது வருடம் இருந்திருக்கிறேன். நான் இந்த மாதிரி விடயங்களில் எப்படி சமாதானம் பேசவேணும். எந்த இடத்தில் விட்டுக் கொடுக்கலாம் என்பதெல் லாம் தெரியும்.

கேள்வி;

தைப்பொங்கலுக்குப் பின் னர் யாழ்ப்பாணம் செல்ல இருக்கிறீர்கள். உங்களுடைய இந்த முயற்சி பற்றி கொழும் பிலுள்ள ஏனைய தமிழ்க் குழுக்களின் அபிப்பிராயம் என்ன மாதிரி?

பதில்;

அவர்களெல்லாரும் இருக் கிறார்களென்றதற்கு ஒரு நல்ல சூழ்நிலையை நாம் முதலில் உருவாக்க வேண்டும். அந்த மாதிரிச் சூழ்நிலையை உரு வாக்கிய பின்னர் யார் யாரு டைய ஒத்துழைப்பெல்லாம் தேவையோ அதையெல்லாம் கூடிய மட்டும் பெறப்பார்ப் போம் என்றார்.


ஸ்ரீதர் திரையரங்கில்

அல்ஜீரிய நாட்டு

# விடுதலைப் போராட்டம்

[தமிழாக்கம் செய்யப்பட்டது]

தினசரி 4.00 மணிக்கும்

சனி, ஞாயிறுகளில் 4, 6 மணிக்கும்

காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன

(B/3564)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" மனி மனையில் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.





விக்கி சங்கர்

[விக்கினேஸ்வரராஜ்]

சாற்றான் பிடியிலிருந்து — எம்<br>
மண்ணை விடுவித்து<br>
சுதந்திரக் காற்றை முகருவதற்காய்<br>
விடியலைத்தேடி விரைந்த வேங்கை<br>
நீர் கொண்ட இலட்சியம்<br>
ஈடேறும் நாள் தூரத்திலில்லை!

உமது பிரிவால் துயருறும்<br>
குடும்பத்தினர்

(B/3607)



வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

பேராதனைப் பல்கலைக்கழக

# G.A.Q 1992 APRIL

மீட்டல் — வினாவிடை வகுப்பு

பொருளியல்

## S. வரதராஜன்

B. A. (Hons)

| | | |
|---|---|---|
| வியாழன் ) வெள்ளி ) | 4-15 | வினாவிடை வகுப்பு |
| சனி | 2.00-4.00 | பொருளியல் தத்துவங்கள் |
| ஞாயிறு | 2.00 4 00 | பொருளாதார வரலாறு |

ஆரம்பம்: 12.12.91 4.15 p m.

குறிப்பு: 15 - 12 - 91க்குப் பின்னர் மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

## பாரதிதாசன் கல்வி நிறுவனம்

ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

(B-3615)